

பாமாலை 440 துன்பம் உன்னை

1 துன்பம் உன்னை
சூழ்ந்தலைக்கழித்தாலும்

இன்பம் இழந்தேன் என்றெண்ணிச்
சோர்ந்தாலும்

எண்ணிப் பார் நீ பெற்ற பேராசிர்வாதம்

கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

பல்லவி

எண்ணிப் பார் நீ பெற்ற பாக்கியங்கள்

கர்த்தர் செய்த நன்மைகள் யாவும்

ஆசீர்வாதம் எண்ணு ஒவ்வொன்றாய்

கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

2 கவலைச் சுமை நீ சுமக்கும் போதும்

சிலுவை உனக்கு பளுவாகும் போதும்

எண்ணிப் பார் நீ பெற்ற பேராசிர்வாதம்

கர்த்தர் செய்த யாவும் வியப்பைத் தரும்

3 நிலம் பொன்னுள்ளோரை நீ
பார்க்கும்போது

நினை கிறிஸ்துவின் ஐஸ்வரியம்
உண்டுனுக்கு

பணங் கொள்ளா பேராசிர்வாதத்தைப் பார்

பரலோக பொக்கிஷமும் வீடும் பார்

4 அகோரத் துன்பங்கள் உன்னைச்
சூழ்ந்தாலும்

அதைரியப்படாதே கர்த்தர் உன் பக்கம்

அநேகமாய் நீ பெட்ற சிலாக்கியங்கள்

தூதர் உன்னைத் தேற்றுவார் பிரயாணத்தில்